13th March 1963]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The finalised proceedings of the meeting of the Southern Zonal Council held at Kanyakumari on the 30th December 1962, have not yet been received. Copies of the proceedings of the meeting will be placed in due course in the Parliament Library and also in the Library of the State Legislative Assembly. Till then, the proceedings of the meeting are not disclosed, following the Southern Zonal Council Rules of Procedure.

Panchayat Development (Separate department)

* 220 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to form a separate department, viz., Panchayat Development Department for the effective administration of the Panchayat; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes.

The matter is still under the consideration of the Government.

Plan Projects (Central Aid)

* 221 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government aid to the State Projects has been reduced in view of the present emergency; and

(*b*) if so, how far it will affect the State Plan?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) During the current year there will be no reduction in Central Assistance for Plan Projects. In 1963–64, however, there will be a cut of about Rs. 4 crores in the Central Assistance for our Plan schemes.

(*b*) In spite of the reduction in Central assistance, we have sought to provide in full for all the essential Plan programmes in 1963–64 by effecting suitable economies under schemes of lower priority and in particular under building schemes.

* **திரு. எஸ். மாதவன் :** இந்த நிதி குறைந்த காரணத்தால், கட்டட வேலைகள் நிறுத்தப்படும் என்ற தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிரைமரி ஹெல்த் ஸென்டர் கட்டுவதை நிறுத்தக் கூடாதென்று நமது சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ஆலோசனை கூறியுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த நிதி குறைந்ததினால் கட்டட வேலைகளை நிறுத்த வேண்டுமென்பதல்ல. பொதுவாக இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையின் காரணமாக கட்டட வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும், கட்டட சாதனங்கள் கிடைப்பதும் கஷ்டமாக இருக்கிறது. பிரைமரி ஸென்டர்களைப் பொறுத்தவரையில் அவ்வப்பொழுது யோசித்து எந்த அளவுக்குக் கட்டடங்கள் கட்டுவது என்று முடிவு எடுக்கப்படும். மத்திய சர்க்கார் ஒன்றும் உத்தரவு போடவில்லை. அப்படிப் போடவேண்டிய நிமித்தமும் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் தலைவர் அவர்களே, சில இடங்களில்
9.00 a.m. ஹெல்த் சென்டர்கள் கட்டுவதற்காக முன்பு சாங்ஷன் செய்யப்பட்டிருந்தும் அவைகள் எல்லாம் இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இப்பொழுது எடுத்துக்கொண்டு முடிப்பதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்..

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்றால் அந்தக் கட்டிடங்களுக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கவில்லை. ஆகையால் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு என்று கட்டப்பட வேண்டிய கட்டிடங்கள் கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். முருகையன் : டாக்டர்கள் இருந்தும் சில இடங்களில் ஆஸ்பத்திரிகளுக்குக் கட்டிடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டிடங்களில் இருந்து வருகிறது. அது போன்ற இடங்களில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவசரமாகக் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்றாலும் அதற்கு வேண்டிய வசதிகள் இருந்தாலும் அவைகள் நிறுத்தப்படாமல் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் பெரிய கட்டிடங்களாக இருந்தால்தான் சாதாரணமாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

திரு. இரா. பொன்னப்ப நாடார் : ஸார், பள்ளிக்கூடங்களுக்குக் கட்டப்பட வேண்டிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏதாவது விதி விலக்கு அளிக்க முடியுமா என்பதை அறிய வுரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிறிய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டியதாக இருந்தால் அவைகள் நிறுத்தப்படாமல் கட்டப்படுகின்றன. அதைப் பற்றி அவ்வப்போது அதில் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

திருமதி. சி. குழந்தையம்மாள் : கனம் தலைவர் அவர்களே, சென்ட்ரல் சோஷல் வெல்பேர் போர்டுக்குக் கொடுத்திருந்த மானியம் நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் கிராமங்களிலுள்ள தாய் சேய் விடுதிகள் கட்டப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்தினிடம் பணம் இருந்தால் அதை வாங்கிக் கட்டலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. மத்திய அரசாங்கம் மானியம் இல்லா விட்டாலும் கூட பஞ்சாயத்துகளிடம் பணம் வாங்கிக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். பஞ்சாயத்துக்கள் பணம் கொடுப்பதாக இருந்தால் அதற்குத் தடை இருக்காது.

Higher Grade Training Schools (Abolition)

*222 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether it is proposed to abolish the Higher Grade Training Schools from next year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The question of the gradual elimination of higher grade training schools is under consideration.

சேரி அபிவிருத்தி டிரஸ்ட்

*212 கேள்வி—திரு. இராம அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையிலும் மற்றும் எல்லா நகரங்களிலுமுள்ள குடிசை வாழ் பகுதிகளைப் புனரமைப்பதற்காக (Slum Improvement Trust) என்கிற தனியான நிறுவனம் ஒன்றை அமைக்க உத்தேசமுண்டா ?